பெருங்குடி வளாகத்தில்

குப்பை கொட்டும் இடத்தை அதிகாரிகள் ஆய்வு!

சென்னை, மே 26 - பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உயிரி அகழ்ந்தெடுத்தல் பணிகள் மற்றும் சேத்துப் பட்டில் உள்ள உயிரி எரி வாயு மையம் ஆகியவற் றின் செயல்பாடுகள் குறித்து கூடுதல் தலைமைச் செயலா ளர்/ஆணையாளர் டாக் டர் ஜெ.இராதா கிருஷ் ணன், நேற்று பார்வை யிட்டு ஆய்வு செய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உயிரி அகழ்ந்தெடுத்தல் பணியினை கூடுதல் தலை மைச் செயலாளர்/ஆணை யாளர் டாக்டர் ஜெ.இரா தாகிருஷ்ணன், நேற்று முன்தினம் (24.05.2023) பார்வையிட்டு ஆய்வு செய் தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சராசரியாக 5500 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரிக் கப்படுகிறது. இந்தத் திடக் கழி வுகள் மக்கும், மக்காத கழிவுகளாக பிரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்யும் வகை யில் பதனிடும் மையங்க ளுக்கு அனுப்பப்படுகிறது. மீதமுள்ள கழிவுகள் பெருங் குடி மற்றும் கொடுங்கையூ ரில் உள்ள குப்பைக் கொட் டும் வளாகங்களில் கொட் டப்பட்டு வருகிறது.

பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகமானது 225 ஏக்கர் பரப்பளவில் உள் ளது. இதில் நீண்ட நாட்க ளாக கொட்டிக் கிடக்கும் குப்பை 34.02 இலட்சம் கன மீட்டர் அளவில் உள்ளது.

தென்காசியில் சாலை பாதுகாப்பு குறித்த ஆய்வுக் கூட்டம்!

அமைச்சர்கள் எ.வ.வேலு - கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்பு!

தென்காசி,மே 26 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தென்காசி மாவட்ட ஆட் சியர் அலுவலகக் கூட்ட ரங்கில் சாலை பாதுகாப்பு குறித்த ஆய்வுக் கூட்டம் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் செயலாளர் பிரதீப்யாதவ் தலைமை யில் நடைபெற்றது. இந்நி கழ்வில் பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ் சாலைகள் துறை அமைச்சர் எ.வ. வேலு,வருவாய் மற் றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்தி ரன் ஆகியோர் பங்கேற்று சாலை பாதுகாப்பு குறித்து விளக்கிப் பேசினர்.

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட் டரங்கில் சாலை பாது காப்பு குறித்து ஆய்வு கூட் டம் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலை மைச் செயலாளர் பிரதீப் யாதவ் தலைமையில் தென் காசி தெற்கு மாவட்ட செயலாளர் பொ.சிவபத்ம நாதன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ, தனுஷ் எம்.குமார் எம்.பி. பழனி நாடார் எம்.எல்.ஏ., சதன் திருமலை குமார் எம் எல்.ஏ., மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் எ.த.சாம்சன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற் றது. மாவட்ட ஆட்சியர் துரை.இரவிச்சந்திரன் வர வேற்புரையாற்றினார்.

பின்னர் பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சா லைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுத லின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட் டத்திலும் சாலை பாது காப்பு குறித்து ஆய்வு கூட் டம் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 15 மாவட்டங்களில் இந்த கூட்டம் நடைபெற்றுள் ளது.16 வது கூட்டமாக தென்காசி மாவட்டத்தில் இன்று நடைபெறுகிறது. நெடுஞ்சாலைத்துறை 75 ஆண்டுகளாக பயணிக்கும் ஒரு துறை, பராக்கிரம பாண்டியன் காலத்திற்குப் பிறகு தென்காசி என பெயர் பெற்றாலும் அதற்கு முன்பே பல பெயர் களால் அழைக்கப்பட்டு வந்துள்ளது சுதந்திரப் போராட்ட தியாகி வாஞ்சி நாதன்,ரசிகமணி, டி.கே.சி. காவடிச்சிந்து,அண்ணா மலை உள்ளிட்டோர் வாழ்ந்த மண் தென்காசி மாவட்டத்தில் சாலைகள் அமைக்கும் பணியில் அதி காரிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும் சாலை களில் அடிக்கப்பட்டும் பெயிண்ட் தெர்மோபி ளாஸ்ட் பெயின்ட் ஆக இருக்க வேண்டும்.ஒளி தரும் தன்மையுடையதாக இருக்க வேண்டும்.முதல் தரமான பிரதிபலிப்பான் களை சாலையில் பதிக்க வேண்டும்.

சென்னையில் ஐ.ஐ.டி. மற்றும் அண்ணா பல்க லைக்கழகம் வல்லுநர்கள் மூலம் 355 நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்க ளுக்கு விபத்தை தடுக்க, சாலைகள் எவ்வாறு அமைக்க வேண்டும் என்று பயிற்சி கொடுக்கப்பட்டுள் ளது.தென்காசி மாவட்டத் தில் அதுபோன்று பயிற்சி பெற்ற பொறியாளர்களை கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும்.மாநிலம் முழுவ தும் 53 பொறியாளர்கள் ரோந்து பயிற்சி அளிக்கப் பட்டு ஆய்வு செய்ய அனுப் பப்படுவார்கள். நெடுஞ்சா லைக்கு சொந்தமான இடம் எது என்று தெரிய வேண்டும். சாலைகள் பல இடங்களில் ஆக்கிரமிக்கப் படுகிறது. ஒரு சில இடங்க ளில் கடைகள் மட்டும் இன்றி பெட்ரோல் பங்கே அமைத்து விடுகின்றனர். நெடுஞ்சாலைத்துறை இடங்களை சரியாக அள வீடு செய்து எஃப் எம்.பி. தயார் செய்து தர வேண் டும் என்று வருவாய்த் துறையிடம் கேட்டிருக்கி றோம்.

மேலும் சாலைகள் அமைக்கும்போது மரங் களை வெட்டுவதற்கும், அகலப்படுத்தும் போதும், நிலங்களை வழங்குவதற் கும்,எதிர்ப்புகள் உள்ளது. முதலமைச்சர் அவர்கள் 1 மரத்தை வெட்டினால் 10 மரங்களை வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்கள் இல்லத்தில் ஒரு வாசகம் எழுதப்பட்டி ருக்கும் மரத்தை நீ வளர்த் தால் மரம் உன்னை வளர்க் கும் என்ற வாசகம் தான் அது.நம் உயிர் வாழ்வதற்கு ஆக்சிஜன் உற்பத்தி செய் வது மட்டுமல்லாமல், கார் பன்டை ஆக்சைடு உறிஞ்சி மாசுக்கட்டுப்பாடு கருவி யாகவும் மரம் செயல்படுகி றது.

சுற்றுலாத்தலமான குற் றாலத்திற்கு அதிக அளவில் பயணிகள் வருவதால் சாலை பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்த வேண் டிய சூழல் ஏற்பட்டிருக்கி றது. சாலை விபத்துகளை தடுக்க நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்து துறை,காவல்துறை,சுகாதா ரத்துறை கல்வித்துறை உள்ளிட்ட துறைகள் மூலம் விழிப்புணர்வு ஏற்ப டுத்தப்பட்டு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பழுதடைந்த சாலைகள் உடனுக்குடன் சீரமைக்கப்பட வேண்டும். ஒப்பந்ததாரர்கள் முறை யாக தரமாக பணிகளை மேற்கொள்கிறார்களா என்பதை பொறியாளர்கள் கண்காணிக்க வேண்டும். பாலங்கள் அமைத்தல் மற் றும் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்ளும் போது ஒளிரும் வழியடைப்பு மற் றும் ஒளிரும் எச்சரிக்கை பலகைகளை அமைக்க வேண்டும். தென்காசி மாவட்டத்தை விபத் தில்லா மாவட்டமாக மாற் றுவதற்கு அரசு துறைகள், த ன் ன ா ர் வ ல ர் க ள் , தொண்டு நிறுவனங்கள், பள்ளி, கல்லூரிகள், ஓட்டு நர்கள் மற்றும் பொதுமக் கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்களின் நூற் றாண்டு முன்னிட்டு 5 லட் சம் மரங்களை நட வேண்டும் என்று முதல மைச்சர் அவர்கள் உத்தர விட்டுள்ளார்கள்.2 ஆண்டு கால ஆட்சியில் இந்த மாநிலம் சிறப்பாக உள் ளது.பிற மாநிலங்கள் தமிழ் நாடு மாநிலத்தை பின்பற்ற வேண்டும் என்று ஒன்றிய அமைச்சர் தெரிவித் துள்ளார்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

நிகழ்வில் வருவாய் மற் றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்தி ரன் பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சாலை பாதுகாப் பின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு சாலை பாதுகாப்பிற்கு அதிக அள வில் நிதி ஒதுக்கீடு செய்துள் ளார்கள்.சாலை சரியாக இருந்தாலும் பாதுகாப்பு விதிமுறைகளை நாம் சரி யாக கடைப்பிடிக்க வேண் டும்.தென்காசி சங்கரன் கோவில் பகுதியில் குற்றால சீசன் மற்றும் திருவிழா காலங்களில் அதிக அளவில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது.அதனை தவிர்க்க சுற்றுச்சாலை அமைக்கப்பட வேண்டும். சாலை பாதுகாப்பு முக்கிய பணியாக கருதி செயல்பட வேண்டும் சாலை பாது காப்பு என்பது நம்முடைய சொந்த பொறுப்பு நம்மு டைய தவறால் விபத்து நடக்கிறது.சாலை விதி களை நாம் பின்பற்றி நடக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ் ஆர்.இரா மச்சந்திரன் பேசினார்.

இதைத்தொடர்ந்து சாலை பாதுகாப்பு குறித்து மேலகரம் அரசு மேல்நி லைப் பள்ளி மாணவி பிரி யதர்ஷினி,சங்கரன்கோ வில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாண வர் சதீஷ்,வீ.கே.புதூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி சுப்ரியா ஆகி யோர் விளக்கி பேசினர்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழ கத்தில் விபத்தில்லாமல் பணிபுரிந்த சிறந்த ஓட்டு னர்கள்,சிறந்த அவசரகால ஊர்தி ஓட்டுனர்கள்,சிறந்த அவசரகால ஊர்தி உதவி யாளர்கள், சாலை பாது காப்பு விழிப்புணர்வு ஏற்ப டுத்தும் வகையில் நடத்தப்பட்ட கட்டுரை போட்டி, வினாடி, வினா போட்டி பொன்மொழி கள் போட்டி,பாடல் போட்டி, ஓவிய போட்டி ஆகிய போட்டிகளில் பங் கேற்று வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிக ளுக்கு பாராட்டு சான்றி தழ்கள் மற்றும் பரிசு கேட யங்களை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்.

நிகழ்ச்சி நிறைவில் நெடுஞ்சாலை கட்டுமா னம் மற்றும் பராமரிப்பு தலைமை பொறியாளர் ஆர்.சந்திரசேகர் நன்றி உரையாற்றினார்.

நிகழ்வில் நெடுஞ்சா லைத் துறை அதிகாரி கள்,தன்னார்வ தொண்டு நிர்வாகிகள் கழக நிர்வா கிகள் கலந்து கொண்ட னர்.

அண்ணல் அம்பேத்கர் நூல்கள் தமிழில் வெளியிடும்

திட்டப் பணிக்கு தற்காலிகப் பணியாளர்கள் நியமனம்!

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அறிவிப்பு!

சென்னை, மே 26 - அண்ணல் அம்பேத்கர் நூல்கள் தமிழில் செம்பதிப் பாக வெளியிடும் திட்டப் பணிக்கு தற்காலிக பணியா ளர்கள் நியமனம் தொடர் பாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அறிவிப்பு ஒன்றை வெளியிடுள்ளது.

அது வருமாறு:-

முதலமைச்சர் அவர்க ளால் 2022 - 2023ஆம் ஆண் டுக்கான சட்டமன்றப் பேரவை விதி எண்110ன் கீழ் அறிவித்த அறிவிப்பில் "அண்ணல் அம்பேத்கர் அவர்களின் தேர்ந்தெடுக் கப் பட்ட நூல்கள் தமிழில் செம்பதிப்பாக வெளியிடு தல்" என்பதாகும்.

இத்திட்டப்பணியை மேற்கொள்ள திட்ட மேற் பார்வையாளர் திங்கள் தொகுப்பூதியம், ரூ. 40,000/, திட்ட உதவியா ளர், திங்கள் தொகுப்பூதி யம்

ரூ. 22,000/ மற்றும் அலு வலக உதவியாளர், திங்கள் தொகுப்பூதியம் ரூ. 15,000/ ஆகியப் பணியிடங்களில் தற்காலிகமாகப் பணியா ளர்கள் எதிர்வரும்

3 ஆண்டு களுக்கு நியம னம் செய்யப்பட உள்ள னர். இப்பணியிடங்க ளுக்கு விருப்பமும், தகுதியும் உள்ளவர்கள் விண்ணப்பத்துடன் சான்றி தழ்களின் சுய சான்றொப்ப மிட்ட ஒளிப்படிகளுடன் இணைத்து வரும் 30.05.2023 பிற்பகல் 5.30 மணிக்குள் இயக்குநர் (கூ. பொ.), உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம், இரண் டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை 600 113 என்ற முகவரிக்கு நேரிலோ, அஞ் சலிலோ அனுப்பக் கேட் டுக் கொள்ளப்படுகிறார் கள். மேலும் விண்ணப்பம் மற்றும் தகுதிகள் குறித்த விவரங்களை www.ulakaththamizh.in என்ற வலைத்தளத்தில் பதிவிறக் கம் செய்துக் கொள்ளலாம்.

இவ்வாறு உலகத் தமிழ ராய்ச்சி நிறுவன இயக்கு னர் அறிவித்துள்ளார்.

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

வழக்கறிஞர் இரா.கிரிராஜன், எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கலந்தா லோசனைக் கூட்டம் இன்று (26-05-2023 வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் எனது (இரா.கிரிராஜன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

இரா.கிரிராஜன், எம்.பி.
செயலாளர்
தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனை வழங்குகிறார்

திருப்பத்தூர் மாவட்டக் கழகக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு

திருப்பத்தூர் மாவட்டக் கழகக் கூட்டம் இன்று (26.05.2023 - வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணியளவில் திருப்பத்தூர் சி.கே.சி. மஹாலில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சரும், மாவட்ட பொறுப்பு அமைச்சருமான எ.வ.வேலு கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்த உள்ளார்.

அதுசமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா,
புதிய கழக உறுப்பினர்கள் சேர்த்தல்,
கழக ஆக்கப்பணிகள்.

க.தேவராஜி எம்.எல்.ஏ.
செயலாளர்
திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்கத்திலிருந்து 4744 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் தண்ணீரை திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி, 4 வது மண்டலக் குழுத் தலைவர் இல.பத்மநாபன், நல்லதங்காள் ஓடை நீர்த்திறப்பு செயற்பொறியாளர் கோபி ஆகியோர் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மெட்டல் பாக்ஸ் மு.நடராசன்
மே 26 (2003)

கழகம் துவக்கிய காலத்திலேயே உறுப்பினராகி, தமது பகுதியில் மன்றத்தை துவக்கி கழகப் பணியாற்றியவர்.

இராயபுரம் பகுதி பிரதிநிதி, பகுதி அவைத் தலைவர் மற்றும் இராதாகிருஷ்ணன் நகர் பகுதி துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மெட்டல் பாக்ஸ் தொழிற்சாலையில் தொ.மு.ச. அமைப்பை உருவாக்கி அதன் பொதுச்செயலாளராகவும், மாவட்ட கவுன்சில் பொதுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து தொழிலாளர் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.